178

2-19

பாரதமாதா

பல சந்தக்கும்மி.

BY

S. R. IYER.

—

மாயவரம்

...பதிப்பிக்கப்பெற்றது.

16 APR 1909

0-85 MAY2,B
N19
14815

16 APR 1918

உ

பாரதத்தாயின் பங்கயத்தாள் துணை.

முன்னுரை.

இந்தியர்களாகிய எம்மவர் எவரும் முந்தி அறிய வேண்டிய தெய்வம் அன்னையாமென முதறிஞர்களாகும் நம்முன்னோர் கூறியிருக்கின்றனர். அவ்வாறு செய்துவருவதே நமது தர்மம்; நமது மதமும் அதுவாம். நம்மெல்லோரையும் தாங்கித்தரித்து, நம்மைத் தழைத்தோங்கப் பார்த்துமகிழும் தாயும், பரமோத்தமமான பாரதமாதேவி அல்லவா? அத்தேவியே, நம்மனைவோருக்கும் குரு; நமக்குத் தெய்வமும் அத்தேவியே! அத்தேவியினிடத்திற் சென்றுபாய உள்ளகத்தூறும் நமது அன்பே நமக்கு நலந்தரும் க்தியாகும். பாரதியின் பாதாரவிந்தத்தை நமது

முடியிற்சூட்டித் தொழுதுவணங்கி, அவ்வன்னையின் திருத்தொண்டினைத் தினந்தோறும் செய்துவருவதில் மனமகிழ்ந்திருத்தலே நமக்குச் சரியையும் கிரியையுமாம். அத்தேவியின் திவ்யமங்கள குணகணங்களை ஆராய்ந்தறிந்து அவைகளில் நமது சிந்தையைச் செலுத்திநிற்றலே நமக்கு ஞானவொளியும் யோக நிலையுமாம். இச்சீரிய பத்தியைச் சிறுவயதிலேயே பற்பல வழிகளால் நாம் தூண்டி எழுப்பிவரவேண்டும். அவ்வாறு செய்வது நமது நாட்டார் நல்லொழுக்கத்தைக் காக்கத்தக்க வேலி ஒன்றைக் கட்டுவதாகும்! இணையிலாத இப்பக்தியிற் சிறிதளவாயினும் நமது செல்வச் சிறுமிகளுக்குக் கொட்டுப்பாட்டிலும் கூட்டிப் புகட்டுதல் நலமெனக்கொண்டு "பாரதமாதா புலசந்தக்கும்மி" என்னும் இச்சிறுநூலை வெளியிடலாயினன். தையலுக்காகுமெனக்கருதி இச்சிறுநூலையும் இவ்வூர் நாஷனல் எஜுகேஷன் கமிடியார் ஏற்றுப் பிரசுரப்படுத்தி யிருக்கின்றனர்.

பாரதத் தாயும் பாங்குட னோங்குக!

மாயவரம்
4-4-19.

S. R.

4479
794.8111
OFFICE OF THE
16 APR 1919
MADRAS

உ

காப்பு.

சந்தம் முடுகு.

இமயத்தரு தவளப்பெறு சிமயப்புனை சுகுணந்தரி
இந்தியத் தேவிமேற் கும்மிகூற
புவனந்தனில் எவருந்துதி மதகுஞ்சர குகனுந்தரு
பொற்புள்ள பாதங்கள் முன்னிற்கவே.

நூல்.

கும்மி.

0-85M812
N19

இந்திய மாதவள் ஏந்திழை கல்யாணி
சுந்தர சக்தியை நாடிடுவோம்
சந்தமி குந்திடும் அந்தமதிமையைச்
சாற்றி அன்புறவே பாடிடுவோம்.

பொன்னுலவு சென்னிகுளக் காவடிச்சிந்து மெட்டு.

சந்தம் வேறு.

அணிகள்தங்கிய மணிகள்தந்திடும் நதிகள்வந்திழி
மலைகள் கொஞ்சிடும்
அழகுமிஞ்சிய திலகணிந்திடும் ம-ஹேன்-ம-ணி
பணிமிகுந்திடும் பதிகிளர்ந்தெழ நிதிவளர்ந்திட
மதிதுலங்கிடும்
பருசுதந்திர பரமஇந்திய சி-ரா-ம-ணி

கும்மி.

பங்கஜபாத அலங்கிருத ஜஞ்சல
நூபுர மோலிடும் பாரததேவி
(முதே)

இங்கிதமும் ஸரஸந்தரு நன்மனமும் புகழும்பெறு
எங்கு முயர்ந்திடும் பாரத தேவி

"பச்சைமலை பவளமலை" என்னும் மெட்டு

தனசரி.

ஆதிமறை நாதந்தரும் எங்கள் திரு நாடு-திவ்ய
ஜோதிமய மானதலம் எங்கள் திருநாடு

இமயமலை ஓங்கிவரும் எங்கள் திருநாடு-தனி
சமயநிலை சாருமிடம் எங்கள் திருநாடு

வானநதி பாயவரும் எங்கள் திருநாடு—சுத்த
ஞானவொளி வீசிவரும் எங்கள் திருநாடு

காந்திதனை யேந்திவரும் எங்கள் திருநாடு-உயர்
சாந்திதனைச் சாற்றிவரும் எங்கள் திருநாடு

திலகமணி யிலகவரும் எங்கள் திருநாடு-எந்தக்
கலகமதும் விலகவரும் எங்கள் திருநாடு

கும்மி வேறு.

உலகமதில் ஓங்குமறை உவந்தணியும் தாயே
உத்தமர்கள் சித்தமுட னோதிவரும் தாயே
திலகமணி யிலகவரும் திவ்யமுகத் தாயே
சிறுவரவர் கோடிவரச் சிந்தைகொளுந் தாயே
கலசமதும் விலகிவரக் கருதிவரும் தாயே
கலைகளுடன் பலதொழிலைக் காதலிக்கும் தாயே
பலமுடைய மக்கள்தமைப் பார்த்துவரும் தாயே
பகையிருளு மகலவரும் பாரதநற் றாயே

"சீர்வளர் பசுந்தோகைமயிலான்" என்னும் காவடிச்சிந்து மெட்டு.

பாரதியின் பதமலரைப் பாங்கிமாரே-அந்த
நாரதரும் நாடுவரே பாங்கிமாரே

சத்தியமே தர்மமெனப் பாங்கிமாரே-நாம்
பத்தியமாய்க் கொள்ளுவமே பாங்கிமாரே

கோகுலனின் குணமணியின் பாங்கிமாரே-எந்த
ஆகுலமு மணுகாதே பாங்கிமாரே

மன்னுயிரை மாநிலத்தில் பாங்கிமாரே-என்றும்
இன்னுயிரா யேந்துவையே பாங்கிமாரே

இந்தியளின் தொண்டினையே பாங்கிமாரே-நாம்
சிந்தைசெயின் மங்களமாம் பாங்கிமாரே

சந்தம் வேறு.

(முடுகு)

ஒருதாயவ்ள்-அடியேபணி-எனுமாமறை-நெறியேசெல
உலகோருயும்-எனும்பாரத-அன்னையே!
பெருநாரத-முனிவோர்முதல்-இசையாழினர்-புகழோ
பெரியோரணி-ஜயபாரத-அன்னையே! [திடும்

சந்தம் வேறு.

போராடும்-பகைதடுத்து-மகிழ்ந்துஜயம்
எடுத்து-மிகச்சிறந்தபலன்-கொடுத்து-தன்னைப்
புகழும்-அடியார்களுக்கும்-சுகம்
முந்துற விடுத்து

பேராரும் திலகமணிக்குக் குலவுதஞ்சமுங்-காட்டி
முகத்தணியின் செஞ்சிருங்-கூட்டி
பேயகத்தின் மாலோட்டிப்
பெற்றிவர நாட்டி

கண்டனைய தனிமொழியாள்-மண்டலங்கள் போற்ற
பல தொண்டர்தன்மை யேற்று
திலகமுடன் காந்தியையும்
அணிந்தனளே நோற்று

"முத்திநெறி" என்னும் தேவாரமெட்டு

பூமகள் இந்தியப் பூரணிப் புகழ்சொல
நாமகள் என்றனின் நயந்தனுக் காவளே!
பாரதத் தாயருள் பாங்கினைப் பகர்ந்திடப்
பாரதித் தாயருள் பணியவும் ஆகுமே!

கும்மி.

வந்தே மாதரம் மந்திரம் ஓதெனத்
தந்தே மகிழ்ந்திடும் தயாபரத் தாயே
தாயிடத் தன்பே தரணியில் எமக்கிவண்
ஆயுநன் னெறியென் றறிந்தனம் தாயே

"கண்ணன் வரக்காணேனடி" என்னும்மெட்டு

திலகமா மணிதனைத் திகழுற அணிந்திவண்
இலகுமா வுலகினை யேந்துறும் பாரதியே!
காந்தியார் மதியினைக் கருத்திலே அணிந்திவண்
சாந்தியே தாவரும் ஸாதக பாரதியே!

கும்மி.

வேதமார் நாதமும் விபனுற ஓங்கிடக்
கீதமார் கோஷமும் கேட்குநற் றாயே
சத்திய நெறியதே தரணியில் தழைத்திட
நித்தியம் விளக்கிடும் நின்மலத் தாயே

முத்திநெறி

தேசநற் பக்தியை ஏசிடின் அம்மவோ
ஈசநற் பக்தியும் எங்ஙனம் ஆகுமால்
எம்முடல் எம்முயிர் எம்மறி வென்பவை
தம்மவை எனக்கொளும் சாற்றரும் தாயே

உலகினில் உயிர்களுக் குறுமிடை யூறெலாம்
விலகநீ விரைந்தவை விலக்குக தாயே
போற்றிநின் பேரருள் போற்றிநின் சீரடி
ஆற்றலின் ஓங்குக அருட்பெருந் தாயே

"ஐய ஒரு சேதிகேளும்" என்னும்
நொண்டிச்சிந்து மெட்டு.

ஆதிமறை ஓதும் நாடே—ஆரியர்
அகத்தினுக் காகுமென அறிந்து கொண்டே
விரிந்திட வந்த நாளில்—அன்னவர்
வியப்புறும் வேதநெறி விடுத்து வந்தார்
பகையிருட் பேயும் பாய்ந்தே—பாரதி
பலமகன் றேங்கிவரப் பகைத்து நின்றார்
ஜாதிமத பேத மென்றே—அந்தச்
சபர்தனக் காகிவரும் ஜனத்திற் கெல்லாம்
நேயமதி யூட்ட வந்தார்—அந்த
நீதிநெறிக் கானவரை நினைந்து சொல்வேன்
ஜோதிமய மாதே கேளாய்!

ஆதிமறைப் போத மாகும்—சத்தியம்
அகத்திணுக் காகுமென அணிந்து வந்தார்
மானமிகும் காந்தி யோகி—கங்கை
வகித்தவன் பாரதியை வணங்கி நின்றே
காசினியும் வாழ வந்தான்—ரவீந்த்ரக்
கவிக்கர சானவரும் கனிந்து மெய்யாம்
ஞானவொளி வீச வந்தார்—இந்தியர்
கலத்தினுக் காகிவர நயக்கும் தொண்டே
பாரதியும் ஏற்கு மென்பாம்—தாயின்
பதத்தினை யேந்திநிதம் பணிந்து நிற்போம்
மாதவளும் ஓங்கி வாழ்க!

தெம்மாங்கு

பூமகளாம் இந்தியளின் பூங்கழலைப் போற்றெடுக்க
நாமகளாம் நற்றேவி நன்னுவளே எந்நாவில்
சீராரும் பாரதியின் தேசுமிகச் செய்குபவர்
பேரார ஐந்துமெனப் பேசுவரே சீரியரும்
வேதியரும் வித்தகரும் மெய்த்தவரும் நின்றிலங்கும்
நீதியளும் பாரதியை நேயமுடன் வாழ்த்துவீரே!
கவிக்கரசாம் கம்பனவர் கவியளித்த எந்தாயும்
புவிக்கரசி யாகுமெனப் போற்றெடுத்து வாரீரே!
வள்ளுவரை வாவென்ற மாதாவாம் பாரதியை
எள்ளுவரும் எங்குளரோ இசைத்திடுவீர் மாநிலத்தீர்

"ஸ்ரீராமசந்திரனே" என்னும் பார்ஸி மெட்டு.

புகழேந்தி வெண்பாவைப் பொற்புறவே தந்தவளாம்
மகிழேந்தும் பாரதியே மா-தா-வாம்

செந்தமிழாம் தேனூறும் தெய்வவளம் ஓங்கிவரும்
இந்தியருக் கெங்கணுமே ஈ-டே-து

செம்மணியாம் முத்தமிழைச் சேர்த்தணியும் பாரதி[யும்
அம்மணியாம் சீரியளே பார்-பார்-பார்

காளிதாசன் காவியத்தைக் காத்தளித்த பாரதியின்
மீளிமாண்பிற் கொப்பேது? சொல்-சொல்-சொல்

மன்னவனும் ஜார்ஜினுக்கு மாமுடியும் சூட்டினவள்
அன்னையவள் பாரதியே காண்-காண்-காண்

"முத்திநெறி" மெட்டு.

சிற்றன்னை சொற்கொண்ட சிராம வள்ளல்தனை
பற்றன்னை பாரதியே பாரிடத்து வேறெவரோ?

பாங்குடனே ஓங்கிவாப் பாரதியாம் நற்றாயும்
ஆங்கிலரின் ஆட்சியதும் ஆமென்றாள் சோதரிகாள்!

"கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்னும் மெட்டு

தேவியா மிந்தியளின் சேவைதனுக் காகாத
பாவியாய்ப் போகாது பணிசெய்வ தெக்காலம்

ஆடவர் பெண்டிராம் அனைவோரும் கல்விதனைக்
கோடவரும் பாக்கியம் கூடிவர லெக்காலம்

நெய்தொழில் முதலியவை நேரியதாய் ஓங்கிவரச்
செய்தொழிற் பயிற்சியிவண் சிறந்திட லெக்காலம்

எட்டின் சுவையதனைக் கூட்டிநிதம் கொள்ளாது
நாட்டின் பலனதனை நாடிவர லெக்காலம்

ஆனந்தக்களிப்பு.

ஆனந்தம் ஆனந்தம் மனமே--நந்தம்
அவனியின் அன்பினில் ஆழ்ந்திடு வோரின்
ஆனந்தம் ஆனந்தம் மனமே

பார்புகழ் எந்தம் நாடெது—மண்ணில்
பாரத நாடெனப் பகருவ ரிங்கே
சீர்புகழ் ஓங்கும் சீரியர்—வந்து
திகழுறப் போந்த சிமையும் இங்கே [ஆனந்த

ஆவணக்காப்ப
சென்னை-600 008
168445

மன்னிய பாமறை நாதம்—இங்கு
துன்னி எழுதாத் தூய்மையு மாமே
அன்னவள் அன்னையின் அடியை—யாமும்
சென்னியில் சேர்க்கச் சிறந்திடு வோமே [ஆனந்தம்

இந்திய மாதினை யிங்கே—யாமும்
சந்ததம் போற்றித் தாங்கிடு வோமே
முந்திய மாண்பதும் வந்து—நித்தம்
மூண்டிங் கெழுதர முந்திடு வோமே [ஆனந்தம்

அண்டர் புகழ்ந்துகொண் டாடும்—உயர்
தொண்டர் மனத்தினைத் துதித்திடு வோமே
மண்டர் மதத்தினை வாங்கும்—சாந்தி
கொண்ட மதியினைக் கூடிடு வோமே [ஆனந்தம்

நாட்டின் நலன்களும் பெருக—நித்தம்
நாடிநின் றுழைவம் நல்லுரங் கூடுவம்
வாட்டிடும் மிடிதனை ஓட்டி—மணம்
வந்திவண் கூட மகிழ்ந்திடு வோமே [ஆனந்தம்

பூரண இந்தியள் வாழ்க!—புகழும்
பூமகள் இந்தியள் போதணி பக்திச்
சீரணி தேசிகர் வாழ்க!—நெடும்
தேசமும் அவரடி யார்களும் வாழ்க! [ஆனந்தம்

"மலடிவயிற்றுமகன்போல" என்னும்
திருப்புகழ் மெட்டு.

அஞ்சும் அநாதையை அடிக்காதே—அவர்
அருந்துய ராற்றிநீ நிற்பாயே [யே
தஞ்ச மென்றோரைத் தடுக்காதே—என்றும் எடுப்பா

வஞ்சகம் நெஞ்சினில் வைக்காதே—என்றும்
மன்னுயிர் மகிழ்ந்துற வருவாயே [லாதே
மிஞ்சிடும் கோபமும் பொல்லாதே—என்றும் வெல்

மன்னுயிர் மாண்புறச் செய்வாயே—தெய்வம்
வந்துனை வாழ்த்திட மகிழ்வாயே [யே
இன்னுயிர் இன்புற நடப்பாயே—துன்பைக் கடப்பா

இன்றைக் கிருப்பதும் மெய்யாமோ—சொந்த
இல்லக வாழ்வதும் மெய்யாமோ
நன்றைப் பிடித்திடின் நலமாமே—நாடும் பலமாமே

"ஆதிசிதம்பரத்தே கிளியே" என்னும்
மெட்டு.

ஒன்றை அறியாதே—மனமே
ஓடி உழலாதே
என்றும் பராதியை—மனமே
ஏத்திப் பணிவாயே

எய்த்து நிற்காதே—மனமே
ஏங்கித் தவிக்காதே
மெய்த்தொழிற் பாரதியே—மனமே
மேதினி வாழ்வாமே

சுபம்ரசு.

சென்னை-600 005

என்று மகிழும் அன்பர் இதய கஞ்ச மருவும் அன்
[னையே
எங்கு மொளிரும் இந்து வதன இங்கு வசன
[அன்னையே
நன்று கருதி நின்று வருக என்று புகலும் அன்னையே
நம்பும் அடியர் வந்து பணிய முந்தி யருளும்
[அன்னையே

ஒன்று படவும் வென்று வருவிர் என்று புகலும் அன்
[னையே
உம்பர் எவரும் நப்பு நெறியை என்றும் அணியு
[ம் அன்னையே
தோன்று மறையி லொன்றி இலகி வென்று வளரும்
[அன்னையே
தோந்த மதுவும் முந்தி பகல வந்து மகிழும்
[அன்னையே

ஆவணக்காப்பகம் சென்னை-600 008
14815

கும்மி.

சந்தம் வேறு.

பைங்கொடியா ளிந்தியளும்
பயமொழித்தாள் ஜயமாக
சொர்திருவை நிகராகச்
செழித்தனளே மாநிலத்தில்

இந்திரசபா தேசவிசாரணை மெட்டு.

கல்வியும் செல்வமும் காந்தியார் சோமனைக்
கண்ட கடலெனப் பொங்கிவர
செல்வய லெங்கும் நிதிதனைத் தந்திட
நித்தியள் இந்தியள் ஓங்கிவரும்

மங்கள மோங்கும் மாதவள் இந்தியள்
மாநில மெங்கும் மகிழ்ந்தெழுந்தே
சங்கட மோதிட வந்தாள் மண்டலம்
தழைத்திடும் சந்ததம் மங்களமே!

பங்கிம் சந்திரரின் பாரதி கீதம்

(பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர் இயற்றியது)

ஸுஜலாம், ஸுபலாம், மலயஜ சீதளாம்
ஸஸ்யஸ்யாமளாம் மாதரம் (வந்தே)

சுப்ர ஜ்யோத் ஸ்நா புளகித யாமினீம்
புல்ல குஸுமித த்ரும தள சோபினீம்
ஸுஹாஸினீம் ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம் (வந்தே மாதரம்)
த்ரிம்சத் கோடி கண்ட கல கல நிநாத கராலே
த்வித்ரிம்சத் கோடி புஜைர் த்ருத கர கர வாலே
கேபலே, மாதுமி அபலே
பஹுபல தாரிணீம் நமாமி தாரிணீம்
ரிபுதல வாரிணீம், மாதரம் (வந்தே மாதரம்)
துமி வித்யா துமி தர்ம,
துமி ஹ்ருதி துமி மர்ம
தவம்ஹி ப்ராணா சரீரே
பாஹுதே துமி மா சக்தி
ஹ்ருதயே துமிமா பக்தி
தோமா ரேயி ப்ரதிமா கடி மந்திரே மந்திரே (வந்)

த்வம் ஹி துர்க்கா தசப்ரஹரண தாரிணீ
கமலா கமலதல விஹாரிணீ
வாணீ வித்யா தாயினீ, நமாமித்வாம் (வந்தே)

நமாமி, கமலாம், அமலாம் அதுலாம்
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ச்யாமளாம், ஸரளாம், ஸுஸ்மிதாம் பூஷிதாம்
பரணீம், தரணீம், மாதரம் (வந்தேமாதரம்)